# PROCEEDINGS

## Volume III

## 3rd PERADENIYA ECONOMICS RESEARCH SYMPOSIUM (PERS) – 2015

Organized by

**The Department of Economics and Statistics**
**Faculty of Arts**
**University of Peradeniya**
**Sri Lanka**

on

**23rd September 2015**

at

**Conference Hall**
**Postgraduate Institute of Humanities and Social Sciences**
**(PGIHS)**
**University of Peradeniya**
**Sri Lanka**

Copyright © September 2015

DEPARTMENT OF ECONOMICS AND STATISTICS
FACULTY OF ARTS, UNIVERSITY OF PERADENIYA
SRI LANKA

PROCEEDINGS OF THE PERADENIYA ECONOMICS RESEARCH SYMPOSIUM (PERS) – 2015

ISSN: 2386-1568
ISBN: 978-955-589-200-1

**Published by**
Department of Economics and Statistics
Faculty of Arts, University of Peradeniya
Peradeniya
Sri Lanka.
Tel: +94 812 392622
E-mail: pers_pera@yahoo.com
Web: www.pdn.ac.lk/arts/econ

All rights reserved. No parts of this publication may be reproduced, stored in a retrieval system, transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior permission of the publisher.

This publication was sponsored by:

**The National Centre for Advanced Studies in Humanities and Social Sciences**
64, Sukhasthan Gardens, Ward Place, Colombo 7, Sri Lanka.
Telephone: +94 112 69 39 74 Fax : +94 112 69 39 75
email: info@ncas.ac.lk Web: www.ncas.ac.lk

**Cover Page**
Ms. Navoda Edirisinghe
University of Peradeniya

**Printed by**
Sanduni Offset Printers (Pvt) Ltd
4/1, Sarasavi Uyana, Goodshed Road
Sarasavi Uyana, Peradeniya.
Tel: +94 812 387777 E-mail: sandunioffset@gmail.com

# புராதன கிரேக்க பொருளியல் எண்ணக்கருக்களும் அடம்ஸ்மித்தின் நவீன பொருளியற் சிந்தனைகளின் வளர்ச்சியும் - ஓர் ஒப்பீட்டாய்வு.

*பொ.பூலோகநாதன்*
*Postgraduate Institute of Humanities and Social Science, University of Peradeniya, Sri Lanka*

***முதன்மைச் சொற்கள்:*** *அடம்ஸ்மித்; பொருளியல் சிந்தனைகள்; புராதன கிரேக்க பொருளியல்*

**அறிமுகம்**

பண்டைய கிரேக்கம் ஐரோப்பிய நாகரிகத்தின் தாயகம் என அழைக்கப்படுகின்றது. கி.மு 5ம், 4ம் நூற்றாண்டுகளில் கிரேக்கத்தின் குடியாட்சி நகரங்கள் சிறப்பு மிகுந்த நகரங்களாக விளங்கின, இதில் முதன்மையானது எதென்ஸ் (Athens) நகரமாகும். இந்நகரமானது அறிவியல், அரசியல், பொருளியல், கலை போன்ற பல்வேறு துறைகளில் புரட்சிகரமாக திகழ்ந்தது. இங்கு தலைச்சிறந்த தத்துவஞானிகளான சோக்கிரட்டிஸ், பிளேட்டோ, மற்றும் அரிஸ்ரோட்டில் போன்றோர் இக்காலத்தினை அறிவியல் புரட்சி மிக்க காலமாக மாற்றியமைத்தனர். இவர்களின் முக்கிய நூல்களான பிளேட்டோவின் குடியரசு (Republic) சட்டம் (The law) போன்ற நூல்ககளிலும் அரிஸ்ரோட்டிலின் அரசியல் (Politics), அறிவியல் (Ethics) போன்ற நூல்களிலும் அவர்களது புரட்சிகர சிந்தனைகளைக் கண்டுகொள்ளலாம்.

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலம் தொட்டு பொருளியல் தொடர்பான ஆராய்ச்சிகள் தொடங்கியிருப்பினும் பொருளாதார கோட்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டது இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு உட்பட்டதாகவே அமைகின்றது. பிளேட்டோ தனது குடியரசில் "ஓர் அரசின் அடிப்படை என்பது உற்பத்தியே" எனக் குறிப்பிட்டு பண்டைய பொருளியலுக்கு வித்திட்டார். தேவைகள் பலவாக இருக்கும்போது அதில் எவரும் தன்னிறைவு அடைவதில்லை. எனவே ஒருவர் தன்னால் இயலக்கூடிய ஒரு பொருளைத் தெரிவுசெய்து சரியான நேரத்தில் உற்பத்தியில் ஈடுபடுவாரேயாயின் பண்டங்களை இலகுவாகவும், மிகையாகவும் உற்பத்தி செய்யலாம் என்பதை பிளேட்டோ வலியுறுத்தினார். சிறப்பு தேர்ச்சி பற்றிய இக்கருத்தே அடம்ஸ்மித்தின் தேசங்களின் செல்வம் எனும் நூலில் விருத்தி செய்யப்படுகிறது. பிளேட்டோவின் குடியரசில் வலியுறுத்தப்படும் தொழிற்பிரிப்பின் முக்கியத்துவத்தினை அடம்ஸ்மித்தின் நூலில் ஓர் பிரதான விடயமாக விளக்கப்படுவதனைக் அவதானிக்க முடிகிறது. பிளேட்டோ தனது குடியரசில் வினைத்திறன் அதிகரிப்பானது உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்யும் என்பதனையும் நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் போன்ற

விடயங்களையும் குறிப்பிட்டுள்ளார். இவற்றினை ஸ்மித்தின் சிந்தனைகளிலும் காணலாம். மேலும் பிளேட்டோவின் நூலில் பொருளாதாரத் துறைக்கு அரசு ஆற்ற வேண்டிய பங்குகள் மற்றும் வணிக ஒழுக்கம் போன்றனவும் வலியுறுத்தப்படுகிறது. இத்தகைய விடயங்கள் ஸ்மித்தின் சிந்தனைகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது.

இதுபோன்று அரிஸ்ரோட்டிலின் அரசியல் (Politics) எனும் நூலில் வெளிப்படுத்தப்படும் பொருளியற் கருத்துக்களான தனியார் சொத்துரிமை, பொருளாதாரத்தில் அரசின் தலையிடாக் கொள்கை, மதிப்புக் கோட்பாடு (Theory of value), பணப்பரிமாற்றம் போன்ற கருத்துக்கள் ஸ்மித்தினது கருத்துக்களோடு ஒத்துச் செல்கின்றன. எந்த பொருளியற் பிரச்சினைகளையும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மாத்திரம் நோக்குவதைவிட ஒழுக்கம், அரசியல், சமூகநலன் போன்ற முறைகளிலிருந்து நோக்கும் கிரேக்ககால கருத்துக்கள் ஸ்மித்தின் சிந்தனைகளிலும் வெளிப்படுத்தப்படுவதனைக் காணலாம்.

பிளேட்டோவின் மாணவனாக அரிஸ்ரோட்டில் காணப்பட்டாலும் இருவரினதும் பொருளியற் சிந்தனைகள் வேறுபட்டமைகின்றன. பொருளாதாரத்தில் அரசின் தலையிடாக்கொள்கை, தனியார் சொத்துடமை போன்ற விடயங்களில் இருவரின் சிந்தனைக்குமிடையே வேற்றுமை காணப்படுவதனை அவதானிக்கலாம். எனினும் அடம்ஸ்மித் இருவரினது கருத்துக்களிலிருந்தும் பொருத்தமான விடயங்களை ஒன்றுதிரட்டி தனது நவீன பொருளியற் கருத்துக்களை தேசங்களின் செல்வம் எனும் நூலில் வெளிப்படுத்துகின்றார்.

இந்தவகையில் தனராஜ் (1996) பொருளியற் சிந்தனைகள் எனும் நூலில் பிளேட்டோ தனது குடியரசில் குறிப்பிட்டவாறு ஒரு அரசின் அடிப்படை உற்பத்தியே எனும் கோட்பாடே அடம்ஸ்மித்தின் தேசங்களின் செல்வம் எனும் நூலில் விருத்தி செய்யப்படுகிறது எனக் குறிப்பிடுகின்றார். மேலும் பிளேட்டோவின் குடியரசில் வெளிப்படுத்தப்படும் தொழிற்பிரிப்பின் முக்கியத்துவம் அடம்ஸ்மித்தின் தேசங்களின் செல்வம் எனும் நூலில் வலியுறுத்தப்படுகின்றது. அதாவது ஒரு நாட்டின் செல்வமானது ஊழியத்தால் உருவாக்கப்படுகின்றது எனும் பிளேட்டோவின் கருத்தினையே ஸ்மித் தனது நூலின் முதலாவது அத்தியாயத்தில் மிகச்சிறப்பாக வெளிப்படுத்துகின்றார் (https://en.wikipedia.org/wiki/Division_of_labour) எனவே புராதன கிரேக்க காலப் பொருளியல்சார் சிந்தனைகள் அடம்ஸ்மித்தினது பொருளியற் கருத்துக்களிற்கு அடித்தளமாக அமைந்துள்ள போதிலும் அது தொடர்பான ஒப்பிட்டு ஆய்வுகள் போதியளவில் இடம் பெறாமையினால் புராதன கிரேக்க கால பொருளியற் கருத்துக்களை ஆராய்ந்து ஸ்மித்தின் சிந்தனைகளோடு ஒப்பிடுவதே இவ்வாய்வின் மையப்பிரச்சினையாகும்.

### ய்வின் நோக்கம்

அடம்ஸ்மித்தின் நவீன பொருளியற் சிந்தனைகளின் வளர்ச்சியில் பண்டைய கிரேக்ককாலப் பொருளியல்சார் கருத்தியல்கள் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கினை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆய்வின் வரையறை

புராதன கிரேக்க பொருளியல் அறிஞர்கள் பலர் காணப்பட்ட போதிலும் கிடைக்கக் கூடிய தகவல்களின் அடிப்படையில் பிளேட்டோ மற்றும் அரிஸ்ரோட்டில் ஆகியோர்களின் கருத்தியல்கள் மட்டுமே இக் கட்டுரையில் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றது.

### ஆய்வின் முறையியல்

இவ்வாய்வின் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு வேறுபட்ட இருகாலத்து நூல்களை ஒப்பிட்டு அவற்றில் காணப்படும் ஒத்த சிந்தனைகளை விளக்குவதற்காக ஒப்பிட்டாய்வு முறை பயன்படுத்தப்படுகிறது. மற்றும் இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் யாவும் இரண்டாம் நிலைத் தரவுகள் மூலம் பெறப்படுகிறது. அதாவது குறித்த ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள் மற்றும் இவர்களது நூல்களிலுள்ள கருத்துக்களை விளக்கும் ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தள கட்டுரைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.

### கலந்துரையாடல்களும் கண்டுபிடிப்புக்களும்.

பிளேட்டோவினதும் அரிஸ்ரோட்டிலினதும் பொருளியற் சிந்தனைகளை அடம்ஸ்மித்தின் தேசங்களின் செல்வம் எனும் நூலில் குறிப்பிடப்படும் பொருளியற் சிந்தனைகளோடு விவாதிக்க முற்படுவோமாயின் பிளேட்டோ அரசின் தோற்றம் தொடர்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அரசு மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே தோற்றம் பெறுகிறது எனவே இது கட்டாயம் இருப்பில் இருக்க வேண்டியதொன்று. மனிதன் தனியானவன் அல்லன். அதேவேளை தனிமனித சுதந்திரம் உடையவனும் அல்லன். வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக கூட்டு மனப்பாங்குடன் செயற்பட வேண்டியும் மற்றவருக்கு உதவுவதற்காக கூட்டுச்சேர வேண்டிய கடப்பாட்டிற்கும் உடையவனாகின்றான். இவ்வாறு கூட்டுச்சேரும் போது உருவாகின்ற பெரியதோர் அமைப்பே நகரமாகும். ஓர் நகரத்திலே பல்வேறு தொழில்களும் காணப்படும் குறித்த தொழில்களில் நிபுணத்துவம் கொண்டவர்களினாலேயே அத்தொழில் தொடர்பான பூரண வெற்றி இலக்கினை அடைய முடியும். இவ் நிபுணத்துவர்களின் ஒன்று கூடல்களே அரசின் தோற்றத்திற்கு வழிசமைக்கின்றது.

ஒரு அரசின் இருப்பினை அதனது பொருளாதார நிலையிலிருந்தே அறிந்து கொள்ள வேண்டும் என்பது குடியரசின் நிலைப்பாடு ஆகும். பொருளாதாரக்கட்டுமானம் சிறப்பாக இருப்பதற்கு தொழிற்பிரிப்பின் முக்கியத்துவத்தை இவர்கள் வலியுறுத்துகின்றனர். ஒரு ஆடம்பர அரசிற்கு நெசவாளர்கள், தச்சர்கள், பொற்கொல்லர்கள், வியாபாரிகள், இடையர்கள், கூலியாட்கள் போன்ற பல தொழில் வகுப்பினர் தேவைப்படுகின்றனர். ஆயினும் ஒரு செழிப்பான செல்வ நகரை உருவாக்க மேற்குறிப்பிட்ட தொழில் வகுப்பிற்கு மேலாக சங்கீத வித்துவான், ஆசிரியர், சமையற்காரர், செவிலித்தாய் போன்றோரும் தேவைப்படுகின்றனர். இவ்வாறான தொழிற்பிரிப்பைக கொண்ட ஆடம்பர அரசு கால ஓட்டத்தில் அதன் எல்லைகளை நீட்ட வேண்டிய தேவை ஏற்படும். அவ்வாறான வேளையில் நில ஆக்கிரமிப்பு செய்ய வேண்டிய சூழல் உருவாகும். அவ்வாறான வேளையில் யுத்தம் ஏற்படும் இதன்போது படைவீரர்கள் தேவைப்படுவார்கள். ஒரு இலட்சிய குடியரசில் குடிகளின் வகை பின்வருமாறு அமைந்திருக்கும் கைவினையாளர்கள் ஆகக்குறைந்த நிலையிலும் போராளிகள் அவர்களுக்கு மேலான நிலையிலும் பாதுகாவலர்கள் (அரசர்கள்) அவர்களுக்கு மேலாகவும் காணப்படுவர். ஓர் உயர்ந்த இலட்சிய அரசினை உருவாக்க தொழிற்பிரிப்பின் முக்கியத்துவத்தை பிளேட்டோ தனது குடியரசில் இவ்வாறு விபரிக்கின்றார்.

பிளேட்டோவினை போன்றே அடம்ஸ்மித்தும் தனது தேசங்களின் செல்வம் எனும் நூலில் தொழிற்பிரிப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றார். இன்நூல் 5 பகுதிகளாக பிரிக்கப்பட்டு 32 அத்தியாயங்களைக் கொண்டு 811 பக்கங்களைக் தொண்டமைகின்றது. இன்நூலில் நாட்டின் செல்வம் ஊழியத்தால் உருவாக்கப்படுகின்றது எனும் பிளேட்டோவின் கருத்தினையே தனது 1ம் அத்தியாயத்தில் வெளிப்படுத்துகின்றது. மேலும் உற்பத்தித்திறன் தொழிற்பிரிப்பால் ஏற்படுகின்றது என்பதனை ஸ்மித் விளக்குகிறார். தொழிற்பிரிப்பு எனும் போது ஒரு தொழிலின் அனைத்துப் பிரிவுகளையும் ஒரு தொழிலாளியைக் கொண்டு உற்பத்தி செய்யாமல் தொழிலை பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு தொழிலாளியை வேலைக்கு அமர்ந்துவதன் மூலம் அதிகளவான உற்பத்தியை செய்யும் முறை தொழிற்பிரிப்பு எனப்படும். நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்கு உழைப்பின் திறமையை அதிகரித்து தனி அலகுகளின் உற்பத்தியை பெருக்குவதன் மூலம் தேசத்தின் செல்வத்தைப் பெருக்கலாம் என்பதனை ஸ்மித் குண்டுசித் தொழிலினை உதாரணமாகக் கொண்டு விளக்குகின்றார். அடம்ஸ்மித்தின் இச்சிந்தனைக்கு அத்திவாரமிட்டது பிளேட்டோவின் குடியரசு எனலாம்.

பிளேட்டோ தனது குடியரசில் வினைத்திறன் அதிகரிப்பினூடாக உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும் என்பதனை ஏற்றிருந்தார். குடியரசிலுள்ளவர்களுக்கு சிறந்த கல்வியறிவை போதிப்பதனூடாக ஒவ்வொரு வேலைகளிலும் நிபுணத்துவம் கொண்டவர்களை உருவாக்க முடியும். தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி நாட்டின் போர்வீரர்களுக்கும் சிறந்த

கல்வியறிவு ஊட்டப்பட வேண்டும் இக்கல்வியறிவினூடாகவே நாட்டின் உண்மையான பகைவர்கள் யார்? என்பதை அடையாளங்காண முடியும். அரசின் கடமை நாட்டு மக்களுக்கு சிறந்த பொருளாதார சிறப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு கல்வியறிவினையும் வழங்குவதாகும். ஸ்மித்தும் நாட்டின் செல்வத்தைப் பெருக்குகின்ற காரணிகளில் ஒன்றாக வினைத்திறனைக் குறிப்பிடுகின்றார்.

அரிஸ்ரோட்டில் தனது அரசியல் எனும் நூலில் தனியார் சொத்துரிமையை ஆதரித்தார். பிளேட்டோவின் பொதுவுடைமை எனும் கருத்தினை இவர் ஏற்கவில்லை தனக்கென சொத்து இருப்பின் அது உற்பத்தியை பெருக்குவதற்கு தூண்டுகோலாக அமையும். இவர் சொத்துக்களை இரண்டு வகைப்படுத்துகின்றார். முதலாவது வீடு, நிலம், குதிரை, அடிமை, அணிகலன் போன்றவற்றை இயற்கைச் சொத்து எனவும் இரண்டாவது .பணம், பங்குப்பத்திரம், கடன் பத்திரம் போன்றவற்றை செயற்கை சொத்து என்றும் குறிப்பிடுகின்றார். அரிஸ்ரோட்டில் சொத்துக்களுக்கு தனியுடைமை எனும் நிலையை வழங்கினாலும் அவை பொது நன்மை எனும் நிலையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும் எனும் நிலையிலிருந்தார். ஆயினும் இவர் தனியார் சொத்துடைமையினையே வலியுறுத்துகின்றார். ஸ்மித்தின் சுயவிருப்பு விதி (Law of self-interest) இதனையே வலியுறுத்துகிறது .உயர்வான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான தனிநபர் ஊக்குவிப்பாக தனியார் சொத்துடமையே சுயவிருப்பை அதிகரித்து உற்பத்தியை பெருக்கும் என ஸ்மித் கருதுகின்றார்.

மேலும் தேசங்களின் செல்வம் எனும் நூலில் வெளிப்படும் பெறுமதிக் கோட்பாடு எனும் கருத்தாக்கத்தினை திட்ட வட்டமாக முதலில் வெளியிட்ட சிந்தனையாளர் அரிஸ்ரோட்டிலே ஆவார். ஒரு பொருளின் பயன்பாட்டு மதிப்புக்கும் பண்டமாற்று மதிப்புக்குமுள்ள வேற்றுமையை தெளிவாக எடுத்துக்காட்டினார். ஸ்மித் பயன்பாட்டுப் பெறுமதி பரிமாற்றப் பெறுமதி என்பவற்றை விளக்க தண்ணீரையம் வைரக்கல்லையும் ஒப்பிட்டுக் காட்டுவது போல் அரிஸ்ரோட்டிலும் இயற்கைச் சொத்து செயற்கை சொத்து என பொருட்களை வேறுபடுத்தி அதன் பயன்பாட்டு மதிப்பு, பண்டமாற்று மதிப்பு முதலியவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

பொருளாதாரத்தில் அரசின் தலையிடாக் கொள்கையை வலியுறுத்தும் ஸ்மித் பொருளாதாரச் சுதந்திரம் எனும் கருத்தினை முன்வைக்கிறார். அரசாங்கம் உற்பத்தி முயற்சியில் ஈடுபடுவதை இவர் எதிர்க்கின்றார். அரசாங்கம் சுதந்திர வர்த்தகத்தை அனுமதித்தால் அது பொருளாதார விரிவாக்கத்திற்கு இட்டுச் செல்லும் என்பது இவரது கருத்தாகும். இது தனியார் சொத்துடைமை என்பதனை மறைமுகமாக வலியுறுத்துகின்றது.

**முடிவுரை**

தொகுத்து நோக்கும் போது அடம்ஸ்மித்தின் சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்தவை பிளட்டோவினதும் அரிஸ்ரோட்டிலினதும் பொருளியற் சிச்தனைகளே என்பதனை நாம் கண்டு கொள்ளலாம். குறிப்பாக குடியரசில் பிளேட்டோ குறிப்பிடும் ஊழியப்பிரிப்பின் முக்கியத்துவத்தினையே சிறப்பு தேர்ச்சி பற்றிய கோட்பாடாக ஸ்மித் தனது தேசங்களில் செல்வம் எனும் நூலின் முதலாவது அத்தியாயத்தில் விளக்குகின்றார். அது போன்று நகரமயமாக்கல், கைத்தொழில்மயமாக்கல், வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் போன்ற கருத்துக்களும் இருவரினதும் சிந்தனைகளிலும் ஒத்துச் செல்கின்றது. மற்றும் அரிஸ்ரோட்டிலின் கருத்துக்களான தனியார் சொத்துடமை, அரசின் தலையிடாக் கொள்கை போன்ற விடயங்களும் ஸ்மித்தின் சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்தன. இவ்வாறு பிளேட்டோவிலிருந்தும் அரிஸ்ரோட்டிலில் இருந்தும் அடம்ஸ்மித் தமக்கு தேவையான கருத்துக்களை விருத்தி செய்து கொண்டார் என்பதனை இவ்வாய்வினுடாக நாம் கண்டு கொள்ளலாம்.

**உசாத்துணை நூல்கள்.**


Price, BB 1997, *'Ancient Economic thought'*, Routledge, Taylor, & Francis, Group.

Richard Lewis, N 1937, *'Republic of Plato'*, MacMillan and co, Ltd London.

Singlair, T.A 1981, *'Aristotle the Politics'*, Penguins books, London.

Smith. A 1937, *An Inquiry into the Nature and Causes of the Wealth of Nations*, Moderlibrary, random house.